**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.68/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. செந்தில் குமார் |
| Husband/Father Name | கருணாமூர்த்தி |
| Village /Area | மகேந்திரவாடி |
| Taluk | நெமிலி |
| Occupation | மேஸ்திரி |
| Age | 35 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.08.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 16.02.2021 அன்று இரவு 11.00 மணியளவில் 5 நபர்கள் என்னுடைய மச்சான் சத்திவேல் என்பவரை அடித்தார்கள். எங்கள் கிராமத்தில் வசிக்கும் அருள் என்வரின் மகள் அனிதா என்பவரை என்னுடைய மைத்துனர் சக்திவேல் காதலித்து வந்தார். இந்த காதலை அனிதாவின் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நிலையில் அனிதா தற்கொலை செய்துக்கொண்டார். மேற்படி சாவிற்கு சக்திவேல் தான் காரணம் என்று அனிதாவின் தந்தை சக்திவேலை பேருந்தை ஏற்றி சக்திவேல் ஓட்டி வந்த இருசக்கர வானத்தை மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். இந்த விபத்தில் சக்திவேல் என்பவரின் வலது கால் துண்டாகிவிட்டது. இடது காலில் விரல்கள் அனைத்தும் நசுங்கி காயங்கள் ஏற்பட்டது. சக்திவேல் ஊனமுற்றதற்கு அனிதாவின் குடும்பத்தார் தான் காரணம். என் மைத்துனர் சக்திவேல் வீட்டின்

அருகில் நிறுத்திவைத்திருந்த JCB வாகனத்தை 16.02.2021 அன்று இரவு 11.00 மணியளவில் எடுத்துக்கொண்டு அனிதாவின் வீட்டு காம்பவுண்டு சுவரை இடித்தார். இதை பார்த்து அனிதாவின் குடும்பத்தார் சத்தம் போட்டவுடன் வண்டியை எடுத்துக்கொண்டு சிறுவளையம் கிராமத்திற்கு வண்டியை ஓட்டி சென்றார். அனிதாவின் குடும்பத்தார் அருள், தினேஷ், நந்தக்குமார், சதிஷ், கலையரசன் ஆகியோர்கள் அவரை பின் தொடர்ந்து துரத்தி சென்றார்கள். சிறுவளையத்தில் புதிதாக வீடு கட்டிக்கொண்டிருந்த கேசவன் என்பவரின் சுவற்றில் மோதி வண்டி நின்று விட்டது. அருள் என்பவர் JCB வாகனத்தின் மீது ஏறி சக்திவேலின் தலையின் மீது கத்தியால் வெட்டினார். தினேஷ் என்பவர் கல்லால் தலையின் பின்புறம் மற்றும் கையில் அடித்தார். மேலும் தினேஷ் என்பவர் கொம்பால் சக்திவேலின் முதுகில் அடித்தார். மற்ற எதிரிகளான நந்தக்குமார், தினேஷ், கலையரசன் ஆகியோர்கள் சக்திவேலின் இடது புற மார்பின் மீது அடித்தார்கள். இதை கண்டு ஊர்மக்கள் சத்தம் போட்டு ஓடி வந்ததை பார்த்து எதிரிகள் ஓடிவிட்டனர் நான் சத்தம் போட்டு கேட்டதற்கு நீ கிட்ட வந்தால் உன்மையும் ஒழித்து விடுவேன் என்று கூறினார்கள். அங்குள்ள கிராம மக்கள் உதவியுடன் 108 ஆம்புலன்சில் வாலாஜா அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றேன். பிறகு மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றோம். மறுநாள் காலை சக்திவேல் இறந்து விட்டார். சம்பவம் குறித்து 17.12.2021 அன்றைய தினமே நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கபடும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள் கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்தார்கள்.

**<u>எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை நான் எழுதவில்லை அதில் கையொப்பம் மட்டும் போட்டேன் என்று சொன்னால் சரிதான். சக்திவேல் இறந்த பிறகு தான் புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னுடைய வீட்டிற்கும் எதிரி தினேஷ் வீட்டிற்கும் இடைப்பட்ட தொலைவு 300 மீட்டர் இருக்கம் என்று சொன்னால் அதற்கு மேலாக இருக்கும். தினேஷ் வீட்டில் கூச்சல் போட்டால் எனது வீட்டிற்கு கேட்காது என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே தெரு ஜனங்கள் கூடி இருந்தார்கள். எனது மச்சானுக்கு வலது கால் முழுவதும் இழுந்து விட்டார், இடது காலில் பாதம் அடிபாகம் முழுவதும் விபத்தில் இழந்துவிட்டார். எனது மச்சான் நடக்க முடியாது என்பதால் ஊன்று கோல் உதவியுடன் தான் நடக்க முடியும் என்று சொன்னால் சரிதான். எனது மச்சானுக்கு முழுக்கால் இழந்து விட்டதால் Jcb யின் உரிமையாளர் அவரை வேலையை விட்டு நிறுத்திவிட்டார் என்று சொன்னால் சரிதான். எனது மச்சானுக்கு குடிப்பழக்கம் உள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. Jcb வாகனத்தில் 5 அடி உயரம் ஏறிதான் சீட்டில் உட்கார வேண்டும் என்றால் சரிதான். எனது மச்சானுக்கு ஒரு கால் இழுந்து விட்டதால் அவரால் 5 அடி உயரம் ஏறி JCB யில் உட்கார முடியாது என்று சொன்னால் சரியல்ல. ஊன்று கோல் உதவியுடன் ஏறினார். ஊன்று கோல் உதவியுடன் JCB யில் எனது மச்சானால் ஏறியிருக்க முடியாது என்று சொன்னால் ஏற முடியும். JCB யில் ஆக்சலரேடர், கிளட்ச், பிரேக் ஆகியவை உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது மச்சான் காலை இழுந்த பிறகு வாகனம்

எதுவும் ஒட்டவில்லை என்று சொன்னால் சரிதான். ஒரே ஒரு காலை வைத்துக்கொண்டு எனது மச்சானால் ஆக்சலரேடர், கிளட்ச், பிரேக் ஆகியவைகளை இயக்கி இருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் கூறியது போல் இயக்கி இருக்க முடியாது என்றும் இறந்தது என்னுடைய மச்சான் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மச்சானுக்கு எதிராக 2வது எதிரி தினேஷோ அல்லது 1 முதல் எதிரி அருளோ காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. அனிதா இறந்ததற்கு காரணம் சக்திவேல் தான் என்றும் சக்திவேல் போதை பழக்கத்திற்கு அடிமையாகியிருந்ததால் தான் அனிதா சக்திவேலை திருமணம் செய்யமாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அனிதா இறந்த பிறகு சக்திவேலுக்கு திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். சக்திவேல் திருமணத்திற்கு பிறகு அவருடைய மனைவி அவருடைய நடவடிக்கை சரியல்லாததால் அவரை விட்டு பிரிந்த விட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு பிறகு தான் பிரிந்து சென்றார். சக்திவேல் இறப்பதற்கு முன்பு சக்திவேலும் அவருடைய மனைவியும் பிரிந்து தான் வாழ்ந்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். சக்திவேல் JCB வண்டியை எடுத்து சென்று கேசவன் வீட்டு சுவற்றில் மோதியதால் கும்பல் சூழ்ந்தது என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டு அங்கிருந்த கும்பல் தான் சக்தி வேலை தாக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல எதிரிகள் தான் தாக்கினார்கள். மகேந்திரவாடிக்கு சிறுவளையத்திற்கும் இடைப்பட்ட தொலைவு 2 அல்லது 3 கி.மீ இருக்கும். அனிதாவின் வீட்டை இடித்துவிட்டு பிறகு பின்னால் வந்த 50 நபரை நான் பார்த்தேனா என்று சொன்னால் எதிரிகள் தான் துறத்தி

வந்தார்கள் வேறு யாரும் துரத்தி வரவில்லை. சம்பவ தினத்தன்று Jcb வாகனத்தை சக்திவேல் ஒட்டவில்லை வேறு யாரோ தான் ஓட்டினார்கள் என்று சொன்னால் சரியல்ல சக்திவேல் தான் ஓட்டினார். கேசவனுடைய வீட்டை இடித்த உடன் அங்கிருந்த கும்பல் ஒன்றாக கூடி சக்திவேலையும் அவருடன் வந்த நபரையும் தாக்க முயற்சித்த போது உடன் வந்த நபர் ஓடிவிட்டார் என்றும் சக்திவேலால் ,இறங்கி ஓடிமுடியாமல மாட்டிக்கொண்டார் என்றால் சக்திவேல் மட்டும் தான் வண்டியை ஓட்டினார். நான் கூறுவது போல் சக்திவேல் வண்டியை ஓட்டியிருந்தால் அவரால் கீழிறங்கி மேற்படி விபத்தில் இருந்து தப்பியிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. அவர்களை எதிரிகள் தான் அடித்தார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்டறும் சம்பவ சமயத்தில் சம்பபவ ் இடத்திலே நான் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அடிப்பட்ட எனது மச்சானை வெங்கடேசன் என்ற நபர் மருத்துவனையில் சேர்தார் நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த இடத்தில் இருந்திருந்தால் நான் தான் மருத்துவமனையில் சேர்த்திருப்பேன் என்று சொன்னால் நான் தான் சேர்த்திருபேன். அருள் எனது மச்சானை மோதி விட்டார் என்ற Motive–வை காண்பிப்பதற்காக இந்த வழக்கில் நான் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல அவர் தான் மோதினார். அருள் எனது மச்சானை மோதிவிட்டார் என்றும் அவர் தான் குற்றவாளி என்பதை நிறுபிக்க இது நாள் வரை அவர் மீது எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது ஆனால் இது நிலுவையில் இருந்தது. எனது மச்சானின் இறப்பிற்கு அவரது மனைவி வரவில்லை வந்து கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கூறுவது போல் அருள் கத்தியாலும் மற்ற 2

எதிரி கொம்பாலும் கல்லாலும் மற்ற 3 எதிரிகள் கையாலும் இறந்த சக்திவேலை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல அவர்கள் தான் தாக்கினார்கள். Jcb வாகனத்தில் 5 எதிரிகளும் ஏறி சக்திவேலை நான் கூறிய விதத்தில் ஏறி தாக்குவற்கு வாய்புண்டா என்றால் சரியல்ல எதிரிகளுக்கும் இறந்த சக்திவேலின் இறப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல அவர்கள் தான் காரணம். சக்திவேல் கேசவனின் வீட்டை இடித்தாதால் தான் பெரிய கும்பல் சத்திவேலை தாக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**(ஒம்./-) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**